உ

சிவமயம்



காங்கேசன்துறையைச் சேர்ந்தவரும்

மஞ்சத்தடியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி குருநாதபிள்ளை அன்னம்மா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

நினைவு வெளியீடு

# கணிமணிச்சரம்

30.06.2005

உ
சிவமயம்



காங்கேசன்துறையைச் சேர்ந்தவரும்
மஞ்சத்தடியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி குருநாதபிள்ளை அன்னம்மா


அவர்களின்
சிவபதப்பேறு குறித்த

நினைவு வெளியீடு

# கண்மணிச்சரம்

30.06.2005

# சமர்ப்பணம்



எங்களின் வாழ்வுக்கும்
வளர்ச்சிக்கும் ஒளியூட்டி
அன்பிலும் பண்பிலும்
சிறந்தவர்களாக உருவாக்கிய
எமது குடும்ப விளக்கான
எம் அன்னையின்
பாதங்களில்
இம்மலரினைச்
சமர்ப்பிக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
கணவர், சகோதரர்கள்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மஞ்சத்தடி,
இணுவில்.

உ
சிவமயம்



அமரர்

## குருநாதபிள்ளை அன்னம்மா

(கண்மணி)

தோற்றம்
20.05.1934

மறைவு
31.05.2005

### திதிவெண்பா

ஆண்டு பார்த்திப வருஷம் வைகாசித்
திங்கள் பதினேழாம் நாள் அபரபக்க
நவமி திதி தன்னில் பூவுலக வாழ்வு முடித்தே
இறையடி சேர்ந்தாள் அன்னம்மா

உ

சிவமயம்



# தோத்திரத்திரட்டு

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓது நாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாட வீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்வாய்
செங்கய லார்புனல் செல்வ மல்கு
சீர்கொள் செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங்க காமுறவே.

## திருவாசகம்

கண்க ளிரண்டும் அவன் கழல் கண்டு
களிப்பன ஆகாதே
காரிகை யார்கடம் வாழ்விலென் வாழ்வு
கடைப்படும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும்
வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல்
பயின்றிடும் ஆகாதே

பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள்
பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து
வெளிப்படும் ஆகாதே
மீன் வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படு ஆடியிலே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரவென் கண்குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவாள்உமை கோன்அடி
யோமுக்கு அருள்புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.



## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்
வேண்டு கின் றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியின்
கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

எதிரி லாத பக்தி தனைமேவி
இனிய தாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறை வோனே
கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

### அமரர்

# திருமதி குருநாதபிள்ளை அன்னம்மா

## அவர்களின் வாழ்க்கை வரலாறு

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது என்கிறார் தமிழ் மூதாட்டி ஔவையார். மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே என வேண்டுகிறார் சைவசமயக் குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசர்.

பிறவிகளில் சிறந்தது மானிடப்பிறவி. இப்பிறவி தப்பின் எப்பிறவி வாய்க்குமோ என எண்ணி ஏங்கியவர் ஞானியர். இம்மானிடப்பிறவியிலே முத்தி என்னும் பேற்றினை அடைந்திட வேண்டும் எனத் துடித்திடுவர்.

இவ்வாறான எடுத்தற்கரிய மானிடப் பிறவியினை ஈழ மணித் திருநாட்டின் வடபால் துறைமுக நகராகவும், அறுபத்து நான்கு கலைகளில் பல்வேறு கலைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கிய பழம்பெரும் புகழ்பெற்ற பட்டினமாம் காங்கேசன்துறையிலே அமரர் சிற்றம்பலம் பார்வதி தம்பதி களின் நான்கு முத்துக்களில் நான்காவதாய் உதித்தவர் அமரர் அன்னம்மா அவர்கள். அவருடன் பிறந்த ஏனைய மூவரும் ஆண்பிள்ளைகள் ஆவர். அவர்களில் அமரர் தம்பிராசா, அமரர் சடாசிவம் ஆகியோர் சிவபத வாழ்க்கையை அடைந்து விட்டனர். மற்றையவர் ஆறுமுகம் சகல செல்வங்களும் செழிப்புறப் பெற்று நாயன்மார்கட்டில் வசித்து வருகின்றார்.

அவர்கள் அனைவரும் தாய் தந்தையரின் சிறந்த வழிநடாத்தலில் சிறுவயது முதல் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவர்களாக உருவாகினார்கள். காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் தலைசிறந்த ஒழுக்கசீலர் குழாத்தில் அமரர் அன்னம்மா அவர்களும் முன்னோடியாகக் காணப்பட்டார்.



அன்னார் சிறுவயது முதல் சித்தத்தை முருகனின்பால் வைத்தார். இதனால் கதிர்காமக் கந்தனையும், மாவிட்டபுரம் கந்தப் பெருமானையும் உளமாரப் பாடி, மனமார வணங்கி வந்தார். அன்னார் திருமணப் பருவம் அடைந்ததும் பெற்றோர் சிறந்த வரனைத் தேடினர். இறுதியாக தமது ஊரைச் சேர்ந்த அமரர் திரு. திருமதி பொன்னையா தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் புதல்வர்களான குருநாதபிள்ளை, வேலாயுதபிள்ளை ஆகிய இருவரில், சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றும் மூத்த மகன் குருநாதபிள்ளைக்கு பெற்றோர், பெரியோர் ஆசியுடன் திருமணம் முடித்து வைத்தனர்.

இவர்களின் இல்லறமாம் நல்லறத்தின் பயனாகவும் கந்தப்பெருமானின் அருளாசியாலும் அமரர் சிவலிங்கம், விமலாதேவி (கெங்கா), மோகனாதேவி (தேவி), விக்னேஸ்வரி (யசோ), கமலாதேவி (கமலா), றஞ்சினிதேவி (றஞ்சி) ஆகிய அறுவரும் இவ்வையகத்தில் வந்து பூத்தனர்.

அவர்கள் அறுவரையும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சாலச் சிறந்தவர்களாக வளர்த்தெடுத்தார். அவர்களில் மூத்த மைந்தனான அமரர் சிவலிங்கம் அவர்கள் இலங்கை மின்சார சபையில் பணியாற்றி வரும்வேளை காலத்தின் கட்டளைக் கமைய அமரராகிவிட்டார். தமது மூத்த புதல்வியை இணுவில் மேற்கைச் சேர்ந்த அமரர் திரு. திருமதி விசுவலிங்கம் கண்மணி தம்பதிகளில் மூத்த புதல்வரான ஜெயரட்ணசிங்கம் (வருமான வரிப் பரிசோதகர், மானிப்பாய் பிரதேச சபை) அவர்களுக்கு மணம்முடித்துக் கொடுத்தார். தமது இரண்டாவது மகள் மோகனாதேவியை தமது ஊரைச் சேர்ந்த உறவுக் காரரான அமரர் திரு. திருமதி தம்பிராசா மாணிக்கம் தம்பதி களின் புதல்வர்களில் ஒருவரான தருமராசா என்பவருக்கும், தனது மூன்றாவது மகள் விக்னேஸ்வரியை காங்கேசன் துறையைச் சேர்ந்த அமரர் திரு. திருமதி சுப்பிரமணியம் சின்னம்மா தம்பதிகளின் புதல்வரான சித்திரவேலாயுதம் என்பவருக்கும் மணம்முடித்துக் கொடுத்தார்.

இவர்கள் மூவரினதும் இல்லறமெனும் தவப்பயனின் காரணமாக ஜெனித்தா, ஜெயந்தா, ஜெயந்தன், ஜெசிந்தா, ஜெயநந்தா, ஜெயவிந்தா, கஸ்தூரி, தனுசன், சஜீபன், டினேஸ், சர்மிளா, விதூஸ் ஆகிய பேரப்பிள்ளைகளையும் கண்டு பூப்படைந்தார். தனது இரு புதல்விகளான கமலாதேவி, றஞ்சினிதேவி ஆகிய இருவரையும் இறுதிவரை தன்னுடனேயே அரவணைத்துக் காத்து வந்தார்.

மண்மேல் யாக்கை விடுமட்டும்' முருகனின் அடி மறவாச் சிந்தையாய் வாழ்ந்து 31.05.2005 இரவு 9.10 மணி அளவில் இவ்வுலக வாழ்வை முடித்துவிட்டு இறையடி சேர்ந்தார்.

அன்னாரது ஆத்மா என்றும் மீளா இன்பத்தில் சுகித்திருக்க கோடான கோடி பிரார்த்தனைகள்.

**"ஓம் சரவணபவ"**





உ
முருகன் துணை



# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு

## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம்
துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும்
நிமல ரருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக



ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு

டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க



வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல

வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு



கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்

மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைகுற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன்நீகுரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்



நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

முற்றும்

# சரஸ்வதி தோத்திரம்



1. வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
சக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்தாக
வுண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.



3. அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

4. தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வடநூற் கடலுந்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

5. பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந்தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

6. பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

7. பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங்கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதம் தெளிக்கும்வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

8. சொல்விற் பனமுமவ தானமுங்
கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.



9. சொற்கும் பொருட்கு முயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற்பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.

# சர்வதேச ரீதியாக
# அங்கீகரிக்கப்பட்ட தினங்கள்

ஜனவரி 10 - உலக சிரிப்பு தினம்
ஜனவரி 31 - உலக தொழுநோயாளர் தினம்
பெப்பரவரி 14 - காதலர் தினம்
மார்ச் 08 - சர்வதேச மகளிர் தினம்
மார்ச் 15 - உலக ஊனமுற்றோர் தினம்
மார்ச் 21 - உலக வள தினம்
மார்ச் 22 - உலக நீர் தினம்
மார்ச் 23 - உலக வளிமண்டலவியல் தினம்
மார்ச் 24 - உலக கசரோக தினம்
மார்ச் 27 - உலக நாடக தினம்
ஏப்ரல் 07 - உலக ஆரோக்கிய தினம்
ஏப்ரல் 15 - உலக நூலக தினம்
ஏப்ரல் 17 - உலக இரத்த தினம்
ஏப்ரல் 18 - உலக மரபுரிமை தினம்
ஏப்ரல் 22 - உலக பூமி தினம்
ஏப்ரல் 23 - உலக புத்தக தினம்
ஏப்ரல் 26 - உலக பாதிக்கப்பட்ட சிறுவர் தினம்
மே 01 - உலக தொழிலாளர் தினம்
மே 03 - உலக பத்திரிகை தினம்
மே 08 - உலக செஞ்சிலுவை தினம்
மே 08 - உலக முஸ்லிம்கள் தினம்
மே 12 - உலக தாதியர் தினம்
மே 13 - உலக அன்னையர் தினம்
மே 15 - உலக குடும்ப தினம்
மே 17 - உலக தகவல் தொடர்பு தினம்
மே 24 - பொதுநலவாய தினம்
மே 31 - புகைத்தல் எதிர்ப்பு தினம்
யூன் 01 - உலக குழந்தைகள் தினம்
யூன் 04 - அடக்குமுறைக்கு எதிரான தினம்
யூன் 05 - உலக சுற்றுச்சூழல் தினம்
யூன் 17 - உலக தந்தையர் தினம்
யூன் 26 - போதைப்பொருள் தடுப்பு தினம்
யூன் 27 - உலக மக்கள்தொகை தினம்



யூலை 11 - உலக சலரோக தினம்
யூலை 28 - உலக அகதிகள் தினம்
ஆகஸ்ட் 06 - கிரோசிமா அணுகுண்டு தினம்
ஆகஸ்ட் 09 - நாகசாகி அணுகுண்டு தினம்
செம்ரெம்பர் 02 - உலக டெங்கு தினம்
செப்ரெம்பர் 03 - சர்வதேச சமாதான தினம்
செப்ரெம்பர் 08 - உலக எழுத்தறிவு தினம்
செப்ரெம்பர் 13 - தாத்தா, பாட்டி தினம்
செப்ரெம்பர் 16 - உலக ஓசோன் தினம்
செப்ரெம்பர் 26 - செவிப்புலன் தினம்
செப்ரெம்பர் 27 - உலக சுற்றுலா தினம்
ஒக்ரோபர் 01 - உலக சிறுவர், முதியோர் தினம்
ஒக்ரோபர் 03 - உலக குடியிருப்பு தினம்
ஒக்ரோபர் 04 - உலக விலங்கு தினம்
ஒக்ரோபர் 05 - உலக உறைவிட தினம்
ஒக்ரோபர் 06 - உலக ஆசிரியர் தினம்
ஒக்ரோபர் 09 - உலக தபால் நிலைய தினம்
ஒக்ரோபர் 10 - உலக உளநல தினம்
ஒக்ரோபர் 12 - உலக கண்பார்வை தினம்
ஒக்ரோபர் 13 - உலக இயற்கை அனர்த்த தினம்
ஒக்ரோபர் 14 - உலக தர தினம்
ஒக்ரோபர் 15 - வெள்ளைப்பிரம்பு தினம்
ஒக்ரோபர் 16 - உலர் உணவு தினம்
ஒக்ரோபர் 17 - வறுமை ஒழிப்பு தினம்
ஒக்ரோபர் 21 - அயடின் குறைநீக்கல் தினம்
ஒக்ரோபர் 23 - உலக இரத்ததான தினம்
ஒக்ரோபர் 24 - ஐக்கியநாடுகள் தினம்
ஒக்ரோபர் 31 - உலக சிக்கன தினம்
சவம்பர் 09 - சட்ட சேவைகள் தினம்
நவம்பர் 16 - உலக பொறுமை தினம்
நவம்பர் 17 - உலக மாணவர் தினம்
நவம்பர் 26 - உலக சட்ட தினம்
டிசம்பர் 01 - உலக எயிட்ஸ் தினம்
டிசம்பர் 10 - மனித உரிமை தினம்
டிசம்பர் 23 - உலக விவசாய தினம்

## வம்ச விருத்தி

பொன்னையா + தெய்வானைப்பிள்ளை → **குருநாதபிள்ளை**, வேலாயுதபிள்ளை (அமரர்)


சிற்றம்பலம் + பார்வதி → தம்பிராசா (அமரர்), ஆறுமுகம், சடாசிவம் (அமரர்), **அன்னம்மா**

குருநாதபிள்ளை + அன்னம்மா →

- சிவலிங்கம் (அமரர்)
- விமலாதேவி + ஜெயரட்ணசிங்கம் → ஜெனித்தா, ஜெயந்தா, ஜெயந்தன், ஜெசிந்தா, ஜெயநந்தா, ஜெயவிந்தா
- மோகனாதேவி + தருமராசா → கஸ்தூரி, தனுஜன், சஜீபன்
- விக்கினேஸ்வரி + சித்திரவேலாயுதம் → டினேஸ், சர்மிளா, விதூஸ்
- கமலாதேவி
- ரஞ்சினிதேவி



# நன்றி நவிலல்




எமது அன்புத் தெய்வம் நோயுற்று தளர்ந்திருக்கையில் உதவிய வைத்தியர்கள், உறவினர்களுக்கும், மரணச் செய்தி கேட்டு உடன்வந்து உதவியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி, கடிதாங்கள், தந்திகள் ஊடாக அனுதாபம் தெரிவித்து ஆறுதல் அளித்தவர்களுக்கும், இன்றைய அந்தியேட்டி, வீட்டுக்கிருந்தியக் கிரியை நிகழ்வுகளில் கலந்துகொண்டவர் களுக்கும் எங்கள் நெஞ்சினில் எமது உளப்பூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

**நன்றி**

மஞ்சத்தடி,
இணுவில்.

இங்ஙனம்
**கணவர், சகோதரர்கள்,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

யோகநாதன் கிரபிக்ஸ் அன் ஓவ்செற் பிரிண்டேர்ஸ் - கே.கே.எஸ் வீதி, இணுவில். தொலைபேசி: 021 - 4590233, மொபைல்: 077 6660580



# கீதாசாரம்

- எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
- எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
- எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
- உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
- எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
- எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
- எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
- எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
- எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொவருடையதாகிறது.
- மற்றொரு நாள் அது வேறொருவருடைதாகும்.
- இந்த மாற்றம் உலக நியதியாகும்.

யோகநாதன் கிரபிக்ஸ் அன் ஓவ்செற் பிறின்ரேர்ஸ் - கே.கே.எஸ் வீதி, இணுவில். தொலைபேசி: 021 - 4590233, மொபைல்: 077 6660580